கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාතර්මේන්තුව, උතුරු පළාත්සභාව
**Department of Co-operative Development, Northern Provincial Council**
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය.
Elders' Home Complex, Kandy Road, Kaithady, Jaffna.

My No:- NP/15/04/02/CCD/CI Date:-2023.01.17

**சுற்றறிக்கை – 01/2023**

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

**இயக்குநர்சபைக் கூட்டங்களிற்கு சமுகமளிக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான படி வழங்கல்**

01. கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைக் கூட்டங்களில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றி பொருத்தமான ஆலோசனைகளை வழங்குதல் அவர்களது பிரதான கடமைகளில் ஒன்றாகும். இக்கூட்டங்களிற்கு அவர்கள் சமுகமளிக்க வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டதால் இது பற்றி தாபனப்பணிப்பாளரிற்கு விண்ணப்பிக்கப்பட்டு குறிப்பிட்ட இச்சேவைக்காக படி வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் படியை அதிகரித்து வழங்குவது தொடர்பில் செயலாளர், மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு அவர்களின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

02. இயக்குநர்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அச்சங்கங்களது வியாபார நடவடிக்கைகள், நிதிநிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக சங்கங்கள் சட்டமுரணற்ற வகையில் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும். இதன்மூலம் சங்கங்களை செயற்றிறன் மிக்கதாக மாற்றமுடியும் எனக்கருதப்படுகின்றது. இக்காரணத்தால் மாதம் ஒன்றிற்கு ரூபா.1800/- என்ற உச்ச எல்லையின் கீழ், கூட்டம் ஒன்றிற்கு ரூபா.600/- வீதம் கூட்டுறவுச் சங்க நிதியிலிருந்து இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கும் உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக படி வழங்க அனுமதிக்கப்படுகின்றது.

03. கட்டுப்பாடுகள்

3.1 கொடுப்பனவுக்கு உரித்துடையோர் :-

அ) கீழே பிரிவு 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களது கூட்டங்களிற்கு சமுகமளிக்கும் அச்சங்கத்தின் அபிவிருத்தி மேற்பார்வைக்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

ஆ) கீழே பிரிவு 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்த கணக்காய்வு அறிக்கையினை இயக்குநர் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக அக்கூட்டத்திற்கு சமுகமளிக்கும் கணக்காய்வாளர்.

ஆணையாளர் / කොමසාරිස් / Commissioner – 021 205 7063
உதவி ஆணையாளர் / සහකාර කොමසාරිස් / Asst. Commissioner – 021 227 1418
கணக்காளர் / ගණකාධිවරයෙක් / Accountant – 021 223 2212
பொது / පොදු / Gen – 021 205 7064
தொலைநகல் / ෆැක්ස් / Fax – 021 205 7062
E- Mail: - ccdnp@mail.com
Web: - np.gov.lk

3.2 உச்ச எல்லை

ஒரு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவில் ஒன்றிற்கு மேற்பட்ட சங்கங்களை மேற்பார்வை செய்யும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் ஒரு சங்கத்தில் இருந்தோ / ஒன்றிற்கு மேற்பட்ட சங்கங்களில் இருந்தோ மேற்படி படியை பெற்றுக்கொள்ள நேர்ந்தால் அதன் உச்ச எல்லை எவ்விதத்திலும் மாதம் ரூபா 1800/-க்கு மேற்படல் ஆகாது.

3.3 வழிமுறைகள்

அ) கடமை நேரத்தின் பின் / விடுமுறை தினங்களில் நடைபெறும் இயக்குநர் சபைக் கூட்டங்களுக்கே இப் படியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆ) குறித்த இயக்குநர்சபைக் கூட்டங்களில குறைந்தது 02 மணித்தியாலத்திற்கு மேல் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.

இ) கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரது ஆலோசனைகளும், அறிவுரைகளும் தேவைக்கேற்ப கூட்டக்குறிப்புக்களில் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

ஈ) கொடுப்பனவுக் கோரிக்கையானது உதவி ஆணையாளரது சிபார்சினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உ) உரிய உத்தியோகத்தர் குறித்த கூட்டத்திற்கு சமுகமளித்து பொருத்தமானவகையில் தனது ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கியுள்ளார் என்பதையிட்டும் அவை சங்கத்தின் நலனுக்கு சிறந்த வகையில் உதவியுள்ளது என்பதை மதிப்பிட்டும் திருப்திப்படுமிடத்து மட்டுமே உதவி ஆணையாளர் சிபார்சினை வழங்குதல் வேண்டும்.

04. மேற்படி கொடுப்பனவானது 01.01.2023இலிருந்து நடைமுறைக்கு வரும்.

05. இக்கூட்டப்படி தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

06. படியினை வழங்கத் தகுதியுள்ள சங்கங்கள்

6.1 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

6.2 பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

6.3 இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்கள்

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

*பிரதிகள் –*

1. செயலாளர், மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு, - தயவுடன் தகவலுக்காக
2. பணிப்பாளர்,மாகாண கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி, வவுனியா – தகவலுக்காக
3. சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்கள்